இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்
PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2023. Founded 19 Feb.1876
St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 147 | இதழ் : 05 | திகதி : 19.03.2023 | விலை : 50.00

## சாவு சுமந்த முல்லையில் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி



முல்லைத்தீவுப் பங்கில் முல்லைப்பங்கு கலாசாரக் குழுமம் தயாரித்து வழங்கிய "சாவு சுமந்த முல்லையில் சரித்திர நாயகன் உயிர்ப்பு" தவக்கால ஆற்றுகை கடந்த 17ஆம் திகதி முல்லைத்தீவு புனித பேதுருவானவர் ஆலய முன்றலில் நடைபெற்றது.

பங்குத்தந்தை அருட்தந்தை அகஸ்ரின் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் திரு. கரன்சன் அவர்களின் நெறியாள்கையில் 120ற்கும் அதிகமான பங்குக் கலைஞர்களின் நடிப்பில் மேடை யேற்றப்பட்ட இவ்வாற்றுகையை 5000ற்கும் அதிகமானவர்கள் பார்வையிட்டு இவ்வாற்றுகையோடு இணைந்திருந்தார்கள். ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் ஆசியுரை கூறி ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வில் கலைஞர்கள் கௌரவிக்கப் பட்டனர்.

## ஆசிய முகங்களைக்கொண்ட மரியன்னையின் கண்காட்சி



களுத்துறையில் உள்ள "தஹம் செவன" இடைநிலைக் குருத்துவக் கல்லூரியில் "மரியன்னையின் ஆசிய முகம்" என்ற தலைப்பில் கண்காட்சி ஒன்று நடைபெற்று வருகின்றது.

ஆசியாவில் உள்ள நாடுகளில் இருக்கின்ற மரியன்னையின் சுருபங்கள் மற்றும் படங்கள் பற்றிய வரலாறுகள் கண்காட்சியில் காட்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இந்தியா, பிலிப்பைன்ஸ், சீனா, இலங்கை, இந்தோனேசியா, ஜப்பான், வியட்நாம் போன்ற நாடுகளில் மக்களால் பயன்படுத்தப்படுகின்ற மரியன்னையின் திருச்சுரூபங்களும் மற்றும் படங்களும் வரலாற்றுப் பின்னணியோடு இங்கே காட்சிப் படுத்தப்பட்டிருக்கின்றன. ☞ 07

## அமதிகளின் டிப்ளோமாக் கற்கை நெறி



யாழ். மாகாண அமல மரித்தியாகிகள் சபையின் உயர் கல்லூரி டீ மசனட் கம்பஸினால் நடாத்தப்படுகின்ற ஆங்கில சிங்கள டிப்ளோமாக் கற்கை நெறியினை நிறைவு செய்த 2020, 2021, 2022ஆம் ஆண்டு மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த 12ஆம் திகதி வைத்தியசாலை வீதியில் அமைந்துள்ள தொடர்பகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ். மாகாண அமல மரித்தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக் அடிகளின் தலைமையில் கல்லூரியின் இணைப்பாளர் அருட்தந்தை சியான்ரன் ஜெனிஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளும், சிறப்பு விருந்தினராக யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. ஞானேஸ்வரன் ரஞ்சித் தேவராஜன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

## யாழ். மறைக்கோட்டப் பீடப்பணியாளர்கள் ஒன்றுகூடல்



யாழ்ப்பாணம் மறைக்கோட்டத்தில் முன்னெடுக்கப்பட்ட பீடப்பணியாளர்களுக்கான சிறப்பு நிகழ்வு கடந்த 11ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை மவுலிஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருச்செபமாலைப் பவனியும், நற்கருணை வழிபாடும் தொடர்ந்து கருத்துரைகளும் குழு விளையாட்டுக்களும் இடம்பெற்றன.

மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகள் தலைமைதாங்கி நற்கருணை வழிபாட்டினைச் சிறப்பித்ததுடன் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்தந்தை அன்புராசா அடிகள் கலந்து கருத்துரை வழங்கினார். யாழ்.மறைக்கோட்டப் பங்குகளிலிருந்து 200 வரையான பீடப்பணியாளர்கள் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

## புதுக்குடியிருப்பு மகா ஞானொடுக்கத்தில் அன்பியக் கருத்தமர்வு



புதுக்குடியிருப்புப் பங்கில் முன்னெடுக்கப்பட்டுவரும் மகா ஞானொடுக்கத்தின் ஒரு செயற்பாடாக அன்பியப் பிரதிநிதிகளுக்கான சிறப்புக் கருத்தரங்கு கடந்த 11ஆம் திகதி புதுக்குடியிருப்புப் புனித சூசையப்பர் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அன்ரனிப்பிள்ளை அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட அன்பிய இயக்குநர் அருட்தந்தை டேவிட் அடிகளும் அவருடன் இணைந்த குழுவினரும் கலந்து அன்பியங்களின் முக்கியத்துவம் அவற்றின் பங்கு செயற்பாடுகள் பற்றியும் புதுக்குடியிருப்புப் பங்கில் அன்பியங்களின் எதிர்காலச் செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்கள். இந்நிகழ்வில் 100ற்கும் அதிகமான பங்குப் பிரதிநிதிகள் கலந்து பயனடைந்தனர்.

## திருக்குடும்ப அருட்சகோதரிகளின் மகளிர் தின நிகழ்வு



போர்டோவின் திருக்குடும்ப யாழ் மாகண சபை அருட்சகோதரிகளால் முன்னெடுக்கப்பட்ட மகளிர் தின சிறப்பு நிகழ்வு கடந்த 08ஆம் திகதி புதுக்குடியிருப்பு மகிழ்பூங்கா வளாகத்தில் நடைபெற்றது. பெண்களை வலுவூட்டி அவர்களின் உரிமையை மதிப்போம் எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெண்களுக்கான விழிப்புணர்வுக் கருத்துரைகளும் குழுச் செயற்பாடுகளும் கலந்துரையாடலும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வன்னியின் 10ற்கு மேற்பட்ட பிரதேசங்களிலிருந்து 100ற்கும் அதிகமான பெண்கள் கலந்து பயனடைந்தனர்.

# எமது எண்ணம்

## பொருளாதார மீட்சிக்கு வழி என்ன?

இலங்கைத்தீவின் பொருளாதார நெருக்கடி தொடரும் நிலையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்குமா? இல்லையா? என்பது தொடர்பான கேள்விகளும்சந்தேகங்களுமேவிஞ்சிக்காணப்படுகின்றன. தன்னிறைவுப்பொருளாதாரத்தை முன்னேற்றுவது உள்ளிட்ட இலங்கைத்தீவின் ஒட்டுமொத்த அபிவிருத்திகள் குறித்துப் பிரதான சிங்களக் கட்சிகள் சிந்திக்கவில்லை என்பது பட்டவர்த்தனம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு அரசியல்வாதியாக இருக்கலாம் ஆனால் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அனைத்து அரசியல் கட்சிகளும் கட்சி அரசியலுக்கு அப்பால் ஒருமித்த குரலில் செயற்பட வேண்டும் என்ற அழைப்பு நியாயமானது.

சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் நிபந்தனைகளை எதிர்க்கட்சிகள் அரசியலாக்கி, அரசாங்கத்தைக் கவிழ்க்க முற்படுவது தற்போதைய நிலையில் ஆரோக்கியமானதல்ல. முதலில் கட்சி பேதங்களுக்கு அப்பால் சாதாரண மக்கள் எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வுகாணவேண்டும். அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றது.

இலங்கை ரூபாவின் பெறுமதி குறைவடைந்து அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பது இலங்கைத்தீவின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்லதல்ல. அது மிக ஆபத்தானது. இதனை எதிர்ப்பு அரசியலில் ஈடுபடும் அரசியல் கட்சிகள், தொழிற் சங்கங்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கத்தின் அடக்குமுறையை மையப்படுத்திப் போராட்டம் நடத்தும் இடதுசாரிக் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் ஈழத்தமிழர்களின் எழுபது வருட அரசியல் பிரச்சினை தீர்க்கப்படாமை குறித்துக் கவலை கொண்டார்களா? அல்லது வடக்குக் கிழக்கில் உள்ள அரச நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக எப்போதாவது போராடினார்களா? குரல் கொடுத்தார்களா? விக்கிரமபாகு கருணாரட்ன, சிறிதுங்க ஜயசூரிய ஆகியோருடைய இடதுசாரிக் கட்சிகளைத் தவிர ஏனைய அனைத்து இடதுசாரிகளும் சிங்கள முற்போக்காளர்கள் என்று கூறுவோரும், ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இனவாதத்தையே விதைத்திருக்கின்றனர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

2009 இல் போர் இல்லாமல் செய்யப்பட்டமைக்கான காரணிகளில் சிவப்புச் சட்டை போட்டு பௌத்ததேசிய அரசியலை முன்னெடுத்து வரும் சில இடதுசாரிக் கட்சிகளும் காரணம் என்பது கண்கூடு.

இந்த ஒரு நிலையில் தற்போது ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்துக்கு எதிராக நடத்தி வரும் போராட்டங்களில் ஈழத்தமிழர்களும் பங்குகொள்ள வேண்டும் என்று கேட்பது எந்த வகையில் நியாயமானது?

குறைந்த பட்சம் தமிழர்களினால் நிராகரிக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைக்கூட அமுல்படுத்த வேண்டுமென இந்த இடதுசாரிகளுக்கு மனம் இல்லை. பிரதான சிங்கள அரசியல் கட்சிகள் சிலவேளை வாக்கு அரசியல் நோக்கில் உடன்பட்டாலும், இந்த இடதுசாரிகள் அதனை இனவாத மூலதனமாக்கி அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுவார்கள். இதுதான் இலங்கைத்தீவில் இடதுசாரிகளின் வரலாறு.

இந்த வரலாற்றுப் பின்புலங்களைக் கொண்ட இடதுசாரிகள்தான் ரணில் அரசாங்கத்துக்கு எதிராகப் போராட்டங்களையும் அடையாள வேலை நிறுத்தப் போராட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றன. வாழ்க்கைச் செலவு கடந்த ஒரு வருடத்தில் பல மடங்காக அதிகரித்ததாலும் பொருளாதார நெருக்கடி தொடருவதாலும் மக்கள் சலிப்படைந்துள்ளனர். அரச ஊழியர்களின் மனங்களும் நொந்துபோயுள்ளன. இவற்றை மூலதனமாக்கி சோசலிச சமத்துவம் என்று சாயம் பூசி வடக்குக் கிழக்குத் தமிழர்களையும் அதில் அரவணைப்பது போன்ற தோற்றப்பாட்டை இடதுசாரிகள் காண்பிக்க முற்படுகின்றன.

“இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து இனரீதியான அரசியல் - பொருளாதாரத் திட்டங்கள் வகுக்கப்பட்டு வந்தமையே பொருளாதார நெருக்கடிக்கு காரணம்” என்று கடந்த ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி கொழும்பு ரெலிகிராப் என்ற ஆங்கில இணையத்தளத்தில் அசோக லியனகே என்ற விமர்சகர், தனது அரசியல் பத்தி எழுத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

முப்பது வருடப் போர் நடைபெற்ற காலத்திலேதான் சிங்கள ஆட்சியாளர்கள் அதிகாரத் துஷ்பிரயோகத்திலும் ஊழல் மோசடிகளிலும் கூடுதலாக ஈடுபட்டிருந்ததாகவும் சிங்கள மக்களுக்கு இப்போதுதான் இது புரிகிறது எனவும் அந்தக் கட்டுரையில் அவர் விளக்கியிருந்தார்.

ஆகவே கட்சிகள் தாம் ஆட்சியமைக்க வசதியாகக் கிளப்பிவிடுகின்ற இனவாதத்திற்கும், ஆட்சியைப் பிடிக்கவே முடியாத இந்த இடதுசாரிகள் பேசுகின்ற இனவாதத்திற்கும் இடையே வேறுபாடுகள் இல்லை என்பதையே தமிழர்களுடனான இடதுசாரிகளின் இப் போராட்ட அணுகுமுறை பகிரங்கப்படுத்துகின்றது.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

## மல்வம் - உடுவில் பங்கு மக்களால் முன்னெடுக்கப்பட்ட வீதிச்சிலுவைப்பாதை

மல்வம் - உடுவில் பங்கு மக்களால் முன்னெடுக்கப்பட்ட வீதிச் சிலுவைப்பாதைத் தியானம் 17ஆம் திகதி கடந்த வெள்ளிக்கிழமை அங்கு நடைபெற்றது.

மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகிய இச்சிலுவைப்பாதைத் தியானத்தில் இறைமக்கள் தத்தம் ஆலயங்களிலிருந்து சிலுவைகளைத் தாங்கியவாறு சங்குவேலி குழந்தை இயேசு ஆலயத்தைச் சென்றடைந்தார்கள்.

அங்கு கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை ஞானேந்திரன் அவர்கள் தலைமையில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## இளவாலை புனித யூதாததேயு ஆலய பங்கு மக்களினால் முன்னெடுக்கபட்ட வீதிச் சிலுவைப்பாதை



இளவாலை புனித யூதாததேயு ஆலயப் பங்கு மக்களினால் முன்னெடுக்கபட்ட வீதிச் சிலுவைப்பாதை 17ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற இச்சிலுவைப்பாதை பங்குத் தந்தைஅருட்பணிஎரிக்றொஷான்அவர்களின்ஒழுங்குபடுத்தலில்நடைபெற்றது. இத்தியானத்தில் பங்குமக்கள் பக்தியுடன் கலந்து கொண்டனர். சிலுவைப்பாதை நிறைவில் அருட்பணிறெக்ஸ்சவுந்தரா அடிகளாரின்தலைமையில்திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டது.

## விண்ணகப் பிறப்பில்
### 90ம் நாள் நினைவலைகள்

மண்மகிழ 13 . 06 . 1947



கண்நெகிழ 27 . 12 . 2022

**அன்ரன்ராஜா -மேரி றோஸ்மலர் (றோஸ்மலர்)**

நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்துத் தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள் (ஏசாயா 57:2)

நிஜமாக எங்களைவிட்டுச் சென்று
தொண்ணூறு நாட்களானாலும்
நீங்கள் இல்லாத எங்கள் வாழ்க்கை
பொலிவிழந்து போனதம்மா.
எங்களுக்காக உறவுகளைப் பகைத்தீர்கள்,
உறவினரின் ஏமாற்று வேலையால்
வயோதிபர் இல்லம் சென்றீர்கள் அம்மா.

நீண்ட காலம் எங்களோடு வாழவேண்டுமென்று
போராடி உங்களை மீட்டெடுத்தோம்
இருபத்தெட்டாம் நாளில் எங்களைத் தவிக்கவிட்டு
நிரந்தரமாக ஏன் பிரிந்து சென்றீரகள் அம்மா?
கனத்த இதயத்துடன்,
தினமும் சுரக்கும் விழிநீருடன் தினமும்
உங்கள் பாசநினைவுடன் வாழும்

*பாசமிகு மகன் விஜிதரன்*
*அன்பு மகள் லியோனா, மடோனா*

AD 27

## விண்ணக வாழ்வின் 4ம் ஆண்டு நினைவுகள்

மண்ணக வாழ்வு 14 . 06 . 1942



விண்ணக வாழ்வு 26 . 03 . 2019

**திருமதி மரியா மின்னொளி ஜுலியன்**
**(லூர்த்துமலர்)**

நான்கு ஆண்டுகள் பறந்தோடிப்போயின
பாச நினைவோ எம்முயிரோடு வாழ்வன
நித்தமும் நெஞ்சிலே நின்றாடும் நாட்கள்
நெறியாக நாம் ஏந்தும் அர்ச்சனைப்பூக்கள்
குத்து விளக்கே எம் குடும்ப நிறை ஒளியே
குளமாகி நிறைவதேன் எங்கள் விழியே
உத்தமியே உங்கள் வாழ்வே ஒரு காவியம்
உள்ளார்ந்த உணர்விலே நிலையான ஓவியம்

**இவர் வாழ்வுக்காக நன்றி கூற 25-03-2023ம் திகதி சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு கோயில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியில் பங்கு பற்றி, அவரின்ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்**

*819, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
*0212229752*
*0777498865*

இவரின் பிரிவால் துயருறும்
அன்புக் கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

AD 26

# பதினாறாம் பெனடிக்ற் யார் இவர்?

## ஓர் உள்ளாந்த பார்வை



கரவையூர்ச் செல்வம்

இரண்டாயிரத்து ஐந்தாம் ஆண்டு சித்திரைத் திங்கள் 18 - 27 நாட்கள் நான் உரோமையில் இருந்தேன். மூன்று மாத கால Monastic Formators programme (MFP) அதாவது பல்வேறு கிளைகளாக வளர்ந்த புனித பெனடிக்ற் அவர்கள் உருவாக்கிய பெனடிக்ற் துறவற சபையி-னர் தமது உருவாக்குனர்களுக்கு ஒரு பயிற்சி அளித்தார்கள். இந்த மூன்று மாதங்களுள் ஒன்பது நாட்கள் எனக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இக்காலத்தில் தான் புதிய திருத்தந்தை ஒருவரைத் தெரிவு செய்ய, கத்தோலிக்க அவை யின் கருதினால்கள் உரோமையில் ஒன்று கூடினர். நான் இந்த நாட்களில் உரோமையில் இருந்ததும், புதியத் திருத்தந்தையைத் தெரிவு செய் யும் நாட்களும் ஒரு நிகழ்வுப் பொருத்தம் (Co-incidence).

**வெள்ளைப் புகை**

சிஸ்ரைன் ஆலயத்திற்கு மேல் எப் பொழுது வெள்ளைப் புகை வருமெனப் பார்க்க, பயிற்சியில் பங்குபெற வந்தவர் கள் வத்திகான் சென்றுவிட்டனர். இது ஓர் அபூர்வ சந்தர்ப்பம் என்பதனால், அன்று எங்களுக்கு விடுமுறை. அங்கிலிக்கன் சபையைச் சேர்ந்த ஒருவரும் நானும் தொலைக்காட்சியில் நிகழ்வுகளைப் பார்த்துக் கொண்டிருந் தோம். ஒருவகை எதிர் பார்ப்பு! முதல் மூன்று சுற்றுக்களிலும் கறுப்புப் புகை தான் தோன்றியது. கறுத்தப் புகை தோன்றினால் அந்தச் சுற்றுத் தேர்வில் ஒருவரும் தேர்வுசெய்யப்பட வில்லை என்று அர்த்தம். எத்தனை சுற்று வாக்கு களிலோ தெரியாது. என்ற ஒரு சலிப்பு!

நான்காவது சுற்று வாக்களிப் பின் பின்னர் வெள்ளைப் புகை தோன்றியது. வத்திகான் சதுக்கதில் திரண்டிருந்த மக் கள் மகிழ்ச்சியால் ஆர்ப்பரித்தனர். கர கோஷம் வானைப் பிளந்தது. யார் தெரிவு. செய்யப்பட்டார்களோ? என்ற ஒரு ஏக்கம்! வத்திகான் சதுக்கத்தில் நின்ற அத்தனை மக்களது ஒருமித்த பார்வை, புனித பேதுருவின் பேராலயத்தின் இடப்பக்க ஒரு யன்னலை நோக்கியே இருந்தது.

**“ரட்சிங்கரா?”**

யன்னல் திறந்தது. வெள்ளை உடுப்பு டன் ஒருவர் தோன்றினார். என்னருகே இருந்த அங்கிலிக்கன் சபைக் குருவான வர் உடனேயே தனது உணர்வை வெளிப்படுத்தினார். “ஓ No! No! ரட்சிங் கரா?” உலகளாவிய ரீதியில் கிறிஸ்தவ உலகம் அதிலும் கத்தோலிக்க உலகம் பெரும்பாலும் அதே உணர்வையே வெளிப்படுத்தினர் என்று கூறின் மிகைப் படாது. நானும் ஓர் அதிருப்தியுடன் தான் இருந்தேன். இனித் திரு அவை மேலும் பின்னோக்கியே பயணிக்கும் என்று எண்ணினேன்.

வெள்ளை உடுப்பில் தோன்றிய ரட்சிங்கரை உன்னிப்பாகப் பார்த்தேன். சில காட்சிகளை நேரில் பார்ப்பதைவிட தொலைக்காட்சியில் பார்ப்பது நன்று. தெளிவு யன்னல் வழி தோன்றிய புதிய திருத்தந்தை தொலைக்காட்சிக் கமரா சூம் (zoom) செய்து காட்டியது. ரட்சிங்கர் வெள்ளை உடுப்பில் (புதிய பதவியில்) சௌகரியமாக இருப்பதாகத் தோன்ற வில்லை!

அவர் தனது இரு கரங்களை யும் உயர்த்தி மக்களை நோக்கி அசைத்த பொழுது ஒரு செயற்கைத் தெளிவு தெரிந் தது. அவருடைய முகம் துன்பத்தினூ டாக ஒரு புன்னகையை வெளிப்படுத்தி யது. இவரால் நடிக்க முடியவில்லை. இவருக்கு முன்னிருந்த திருத்தந்தை ஜோன் போல் II ஒரு நடிகன், ஒரு கவிஞன், ஒரு Showman, காட்சிக் கலைஞன்! கமராக்கள் முன் அவர் இயல்பாக இருக்கக்கூடியவர். அவருக்கு அது கைவந்த கலை. நான்காவது தேர் தல் சுற்றிலேயே ரட்சிங்கர் தெரிவு செய்யப் பட்டார். இவருடைய தெரிவு எதிர்பார்த்த தொன்று என்று வத்திகான் அவதானி கள் எழுதினார்கள். ஜோன் போலின் மிக நீண்ட பிற்போக்கு ஆட்சிக்குப்பின் உடனடி யாக நேர் எதிரான ஒருவரை நியமித் தால் திருஅவை பிளவுபடக் கூடுமெனக் கருதினார்கள் சிந்தித்தார்கள். ஆகவே ஜோன் போலின் கொள்கைகளைத் தொடரக்கூடிய ஒருவர், அவரோடு நீண்ட காலம் வத்திகானில் சேவையாற்றிய ஒருவர், அவரின் கொள்கைகளைப் பெருமளவில் ஏற்று பிற்போக்குச் சிந்தனையை பெருமளவில் வளர்த்தவர் ரட்சிங்கர், ஆயினும், கருதினால்கள் சிலர் மாற்றத்தையும் விரும்பினார்கள். வத்திகானின் ஆட்சி மன்றத்தில் மாற்றங்கள் தேவையென்பதையும் சில கருதினால்கள் விரும்பினார்கள். அதனா-லேயே 2005 இல் கூடிய கர்தினால் அவை (Conclare) முதலாவது தெரிவில் கருதினால் பேர்கோகினியோ (பின்னர் போப் பிரான்சிஸ்) முன்னிடமான வாக்கு களைப் பெறச்செய்தனர். ஆயினும் அவரே முன்னின்று ரட்சிங்கரை ஆதரிக்கும்படி தனது ஆதரவாளர்களைக் கேட்டுக் கொண்டதாக வத்திகான் அவதானிகள் எழுதியுள்ளனர்.

**துவக்கம்**

ஜோசவ் ரட்சிங்கர் மூன்றாவது பிள்ளையாக 1927ம் ஆண்டு சித்திரைத் திங்கள் 16ம் நாள் ஜேர்மனின் பவேரியா வில் பிறந்தார். இவருடைய மூத்த சகோத ரன் ஜோர்ஜ் அவர்களும், சகோதரி மரியா வும் இவருக்கு நெருக்கமானவர்கள். 1943ம் ஆண்டு 16 வயதில் ஜேர்மனின் கிட்லரின் இராணுவத்தில் கட்டாயமாக சேர்க்கப்பட்டார். இரண்டாவது உலகப் போரின் முடிவில், இராணுவத்திலிருந்து தப்பி ஓடிய இவர் பிடிபட்டு மீண்டும் இராணு வத்தில் இணைக்கப்பட்டார். 1945இல் இவர் இராணுவத்திலிருந்து விடுவிக்கப்பட் டார். இவையெல்லாம் இளம் ஜோசேவ் ரட்சிங்கரை எவ்வளவு தூரம் பாதித் திருக்குமென்பது பெரியதோர் கேள்வி!

இராணுவத்திலிருந்து வெளியேறிய ஜோசவ் ரட்சிங்கர் குருமடத்தில் சேர்ந்து, குருவாகக் கல்வி கற்றார். 1950ம் ஆண்டு இவரது சகோதரர் ஜோர்ஜ் அவர்களுடன் திருநிலைப்படுத்தப்பட்டார். சிறிது காலம் பங்குப் பணி செய்துவிட்டு மீண்டும் இறை யியல் மேற்படிப்பை மேற் கொண்டு, பின் னர் பொன் (Bonn Master) பல்கலைக்கழகத் திலும், அதைத் தொடர்ந்து ரூபின்யான் (Tubingen) பல்கலைக்கழகத்திலும் விரிவு ரையாளராக பணியாற்றினார். கான்ஸ் குயுங் (Hans Kung) அவர்களின் அனுசர ணையுடன் கிறிஸ்தவ சமய சித்தார்ந்த இறையியல் துணைத் தலைவரானார்.

**முற்போக்காளர்**

இந்தவேளை இவர் ஒரு முற்போக்குச் சிந்தனையாளனாக இயங்கினார். வத் திக்கானின் சிந்தனையாளனாக இயங்கி னார். வத்திக்கானின் இறுதிய தன்மையில் இருந்து ஒரு திறந்த நிலை உருவாக வேண்டுமென்று குரல் கொடுத்தவர். ஒரு புரட்சிகரமான இறையியல் சிந்தனையாள ராகவே கணிக்கப்பட்டார். வத்திக்கான் சங்கத்துப் பின்னணி இறை யியலராக இவர் இயங்கினார். கொலோனின் (colon) பேராயர் ஜோசவ் வி. அவர் களின் இறையியல் ஆலோசகராக வியங்கினார். ஆயர் குழுக்களின் (episcopal collegiality) கூட்டுரிமை பற்றி ஒரு நூலையே எழுதியவர்.

அம்பிட்டியாவில் உள்ள குருத்துவக் கல்லூரியில் இறையியல் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்த வேளை, ஜிம் குக் அ.ம.தி அவர்கள் இவருடைய இந்நூலை எங்களுக்கு அறிமுகம் செய்து, எங்களுக்கு விரிவுரையாற்றியது இன்னமும் எனது செவிகளில் கேட்கிறது. சங்க ஏடுகளின் சில ஏடுகளுக்கு பின் இவரது கருத்துக்கள் தான் என்பது தெளிவு. Hans King, Karl Rahner, Yves Congar போன்ற முற்போக்குச் சிந்தனையாளர்க ளுடன் சேர்ந்து இறையியல் முற்போக்குச் சஞ்சிகையான Concilium ஏட்டில் கட்டு ரைகள் வரைந்து தொகுத்து வழங்கிய வர், இந்த ஜோர்ச் ரட்சிங்கர்.

**ஒரு தீடீர் மாற்றம்!**

1968 ம் ஆண்டில், இவரது வகுப்பிலும் இவரது பல்கலைக்கழகத்திலும் மாண வர் புரட்சி வெடித்தது. பல்கலைக் கழகத்து வகுப்புகளை மாணவர் பகிஷ்கரித்தனர். ஜோசவ் ரட்சிங்கர் அதிர்ந்து போனார். தன்னுடைய முற்போக்குச் சிந்தனை, எழுத்து, விரிவுரைகள் தான் இப்புரட்சிக்கு காரணமெனத் தன்னையே நொந்து கொண்டார். தன்னையே மாற்றிக் கொண்டார். பாரம்பரியத்தைக் காப்பாற்ற முனைந்தார். முற்போக்குச் சிந்தனை பிற்போக்குச் சிந்தனையாக மாறியது. இது, ஒரு பாரிய மாற்றம். மென்மையான மனங் கொண்டதினால் தான் இம் மாற்றமா? திருஅவைக்கு உண்மை யுள்ளவனாக இருக்க வேண்டுமென்று நினைத்தாரோ? தன்னால் திருஅவைக்கு எந்தத் தீங்கும் எந்த வகையிலும் ஏற்படக்கூடாதென்று சிந்தித்தாரா? புரியவில்லை! ஒரு சிறந்த சிந்தனையாளர். ஒரு கல்விமான் ஒரு மகத்தான பேராசிரி யர், ஒரு மேதை இவ்வாறு தலை கீழாக மாறலாமா? இப்படியான ஒரு மனமாற்றம் ஏற்படுமா? குழப்பமாகவே உள்ளது! யதார்த்தம் என்னவென்றால் ஜோசவ் ரட்சிங்கர் முற்போக்கை விட்டுவிட்டு பிற்போக்கைக் கடைப்பிடித்தார். திருவழிப்பாட்டுமுறையில் இரண்டாவது சங்கத்துக்கு முன்னைய முறைக்கு இவர் தாவினார். இதில் இவர் பழைமையை விரும்பியவராகவே தோன்றினார். பத்தாம் பத்திநாதரின் பெயரில் இயங்கிய ஒரு சமூகம் (SSPX) திரு அவையில் இருந்து பிரிந்து பழமைக்குத் திரும்பியது. இவர்களை ஆதரிப்பது போன்று பதினா-றாம் பெனடிக்ற் அவர்களின் சுற்றறிக்கை Summon Pontiatin அமைந்தது.

**மாற்றுக் கருத்துக்கு இடமில்லை**

பல கத்தோலிக்க இறையியளாளர்கள் இவரால் திருஅவையில் இருந்து தூக்கி எறியப்பட்டனர். மாற்றுச்சிந்தனைக்குத் திருஅவையில் இடமில்லை என்றார். கிட்டத்தட்ட முப்பத்து இரண்டு ஆண்டு களாக இவருடைய செல்வாக்கு வத்திக் கானிலும் திருஅவையிலும் இருந்தன. இவர் ஒரு நிர்வாகி அல்ல. அப்படியிருந் தும், கல்வித்துறையைவிட்டு ஏன் ஆயரா-னார் என்று இவருடைய மாணவர் ஒருவர் கேட்டபொழுது, இவர் சொன்ன பதில் “திருத்தந்தையின் தனிப்பட்ட அழைப்பை நிராகரிக்க முடியவில்லை” ஆயராக, கர்தினாலாக திருஅவையின் படிப்பினை களைப் பாதுகாக்கும் முக்கிய பணிக் காக உரோமைக்கு ஜோன் போலினால் அழைக்கப்பட்டபொழுது இவர் விரும்பித் தான் சென்றாரா? என்றொரு கேள்வி எழுத்தான் செய்கின்றது. இறுதிக் காலத் தில் இவர் சொல்லியதாக ஒரு பதிவு ஒரு பல்கலைகழகத்தில் இறையியல் பேராசிரி யராகவே இருந்திருக்கலாம்!” ஆகவே இறுதிக் காலத்தில், குறிப்பாக கடந்த 32 ஆண்டுகளாக இவர் ஒரு மனப் போராட் டத்திலேயே வாழ்ந்துள்ளார் போலும். ஒரு கல்விமானுக்கு இது கடினம்.

திருஅவையில் பரவலாக நடந்த பாலியல் துஷ்பிரயோகமும் (அயர்லாந்து ஆயர்களை உரோமைக்கு அழைத்து அவர்களுக்குச் சொன்னார்: இது ஒரு கடும் குற்றமும் பாரிய பாவமும் ஆகும். வத்திகானின் கேவலமான நடத்தை களும், பண மோசடிகளும் மென்மை யான கல்விமேதையை வெகுவாக பாதித்தது. இவருடைய தனிப்பட்ட கடிதத் தையே இவரின் உணவுமேசைப் பணி யாளன் கசியவிட்டது இவரை மேலும் பாதித்தது.

**இறுதியாக ஒரு புரட்சி**

நீண்ட சிந்தனையின் பின்னர், செபத்தில் தெளிவாக உய்த்துணர்ந்து, (discernment) தனது திருத்தந்தைப் பொறுப்பிலிருந்து இராஜினாமாச் செய்தார். கத்தோலிக்க உலகம் மட்டுமல்ல முழு உலகுமே அதிர்ச்சியுற்றது. கத்தோலிக்க திருத்தந்தையர் வரலாற்றில் 600 ஆண்டு களுக்குப் பின்னர் முதல் முறையாக ஒரு திருத்தந்தை இராஜினாமா செய்தார். ஐந்தாம் செலஸ்ரீன் 1294ம் ஆண்டில் தனது திருத்தந்தைப் பொறுப்பில் இருந்து இராஜினாமாச் செய்தார். பதினாறாம் பெனடிக்ற் இராஜினாமாச் செய்ய முன்னர் அவருடைய கல்லறைக்குச் சென்று செபித்தார். என்று வத்திக்கான் அவதா-னிகள் கூறினார்கள்.

இது ஒரு சாதாரண இராஜினாம அல்ல. இவருடைய செயலால், திருத்தந் தையைச் சுற்றியிருந்த ஒரு மாயை அகன் றது. பெனடிக்ற் தனது இராஜினாமாவுக் குக் கொடுத்த காரணமென்ன? பிரச் சினைகள் மலைபோன்று திரண்டு வரும் பொழுது அவற்றை நேருக்கு நேராகச் சந்தித்து அவற்றிலிருந்து தீர்வு கள் காண வலிமை இல்லாத பொழுது பொறுப்பிலிருந்து விலகுவதுதான் முறை யான செயல். பாரம்பரியத்தைக் காத்து வந்த திருத்தந்தை இறுதியில் ஒரு சீர் திருத்தத்திற்கு வழி கோலிவிட்டார், தனது இராஜினாமாவால் போப் பிரான்சிஸ் அவர்களும் நேரம் வரும் பொழுது இராஜினாமா செய்யலாம். அதாவது இனிவரும் திருத்தந்தையர்கள் உடல் ரீதியாக மனவலிமை ரீதியாக பலவீனமா கும் பொழுது இராஜினாமா செய்யலா மென்ற ஒரு சிந்தனையை பெனடிக்ட் விதைத்து விட்டார். அவரைத் தொடர்ந்து பொறுப்பேற்ற போப் பிரான்சிஸ் எடுத்த எடுப்பிலேயே திரு அவையில் சீர்த்திருத் தங்களைச் செய்ய ஆரம்பித்தார்.

தன்னைச் சுற்றி வந்த பெனடிக்றின் ஆதரவாளர்களின் வேண்டுகோள்களை நிராகரித்து போப் பிரான்சிஸ் அவர்களின் சீர்த்திருத்தப் பணிக்கு ஆதரவளித்தார். திருத்தந்தை பெனடிக்ற் அவர்கள் எந்தக் கட்டத்திலும் பெனடிக்ற் அவர்கள் பிரான் சிஸ் அவர்களுடைய சீர்திருத்தங்களை விமர்சிக்கவில்லை.

மென்மையான மனிதன், கருணை யுள்ள மனிதன், பண்புள்ள மனிதன் ஓய் வில் செபத்தில் ஆழ்ந்தார். தான் யாரை யாவது நோகச் செய்திருந்தால் அவற்றிற் காக இறுதிவேளை மன்னிப்பு கேட்டார். தனது செயல்களுக்கு இறைவன் தீர்ப் பளிப்பாரென்று செபித்ததாகப் பதிவு

(தொடர்ச்சி 5ம் பக்)

# ஒப்புரவு எமது வாழ்வோடு இணைய வேண்டும்

**முகவுரை**

மனித வாழ்வில் முரண்பாடுகளும், மனத்தாங்கல்களும் இல்லாமல் எந்த ஒரு மனிதராலும் வாழமுடியாது. இவை வாழ்வோடு இரண்டறக்கலந்து காணப்படுகின்றது. சுதந்திரமாக அன்போடு வாழ அழைக்கப்பட்ட மனிதன் முரண்பாடுகளாலும், மனத்தாங்கல்களாலும் புனிதமான உறவுகளை முறித்துக் கொள்கின்றான். உறவு என்பது உயிரோட்டமுள்ளதாக இருக்க வேண்டும். உறவை மதிக்க வேண்டும், புனிதமாகப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்பதே இறைவனின் திருவுளமாக இருக்கின்றது. இந்த உறவு ஆரோக்கியமானதாக இருக்க வேண்டுமாயின் ஒப்புரவு என்கின்ற கிறிஸ்தவ மதிப்பீடு எமது வாழ்வோடு இரண்டறக் கலந்து வாழ்வாக்கப்பட வேண்டும். உண்மையான அன்பும், களங்கமில்லா உறவும் ஒன்றாக இருக்குமாக இருந்தால் ஒப்புரவு வாழ்வு இலகுவானதாக அமையும்.

**ஒப்புரவின் அடையாளமே கிறிஸ்து**

எப்படி நாம் எமது அன்றாட வாழ்வில் ஒப்புரவின் மூலம் இறைமகன் இயேசுவின் சீடத்துவத்துக்குள்ளே வாழமுடியும் என்பதைக் கிறிஸ்து வாழ்ந்து காட்டியுள்ளார். உவமைகள் மூலமாகவும் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார். ஊதாரிமைந்தன் தந்தையிடம் இருந்து பிரிந்து சென்று தான் தோன்றித்தனமாக வாழ்ந்து மனம்மாறித் தந்தையிடம் திரும்பி வந்து தந்தையோடு ஒப்புரவாகின்றான் (லூக் 15:11-32). தந்தை தன்னுடைய ஊதாரித்தன அன்பை வெளிப்படுத்தி மகனை மன்னித்து ஏற்றுக் கொள்கின்றார். இதே போல் இறைவன் எம்முடைய ஒப்புரவிற்காக வழிமேல் விழிவைத்துக் காத்துக் கொண்டிருக்கின்றார். மனத்தாங்கல்கள் ஏற்படும் போது அதைவிட்டு ஓடிப்போவதோ, அல்லது உண்மைக்கு எதிராகச் செயற்படுவதோ, ஒப்புரவிற்கான வழி அல்ல. அமைதியின் அரசரான ஆண்டவன் யேசு எதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சவில்லை "கிறிஸ்து யேசுவின் முன்மாதிரிகைக்கேற்ப நீங்கள் ஒரே மனத்தினராய் இருக்குமாறு, மன உறுதியையும் ஊக்கத்தையும் தரும் கடவுள் உங்களுக்கு அருள்புரிவாராக" (உரோ 15:5). ஒரே மனத்தினராகவும் யேசுவின் சீடர்களாகவும் பிறரோடு அன்போடு நட்புறவு கொள்வது ஆன்மீக வளர்ச்சிக்கான அடையாளமாக இருக்கின்றது.

**ஒப்புரவு, அருள்வாழ்வின் கொடை**

நாம் இறைவனின் அருளையும், அன்பையும் நிறைவாகப் பெற்றுக் கொள்ள "இறைவன் எம்மை நிறைவாக ஆசீர்வதிக்க" நாம் நிலைவாழ்விற்குரிய மக்களாக வாழ ஒப்புரவு வாழ்வு வழி காட்டுகின்றது. இறைவனோடும் அயலவரோடும் ஒப்புரவாக வாழ்வின் உறவு நிலைகளைப் புதுப்பித்துப் புனிதப்படுத்த இத் தவக்காலம் உகந்ததாக இருக்கின்றது. "ஆகையால் நீங்கள் உங்கள் காணிக்கையைப் பலிப்பீடத்தில் செலுத்த வரும்போது உங்கள் சகோதர சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல் மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால் அங்கேயே பலிப்பீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய் முதலில் அவரிடம் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பின்பு வந்து காணிக்கையைச் செலுத்துங்கள்" (மத் 5:23-24). ஒப்புரவின்றி ஒப்புக் கொடுக்கும் பலியும் காணிக்கையும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்வோம். இறைவன் ஒப்புரவின் ஆண்டவராக இருப்பதனால் ஒப்புரவுக்கான முயற்சிகளை நாம் தான் முதலில் மேற்கொள்ள வேண்டும். சரியான தீர்மானங்கள் ஆன்மீக இழப்பைக் குறைக்கும். அடுத்திருப்போரோடு ஒப்புரவாகாமல் இருப்பதால் எமது இறைவேண்டல் கேட்கப்படாமல் போகலாம்.

**தவறுகளை ஏற்பதே ஒப்புரவிற்கு வழி**

பிரிந்த உறவு நல்லுறவாக நாம் மன்னிக்க வேண்டியது அவசியம். ஒப்புரவு வேண்டும் என்று நினைப்பவர்கள்



தங்கள் தவறுகளை ஏற்றுக் கொள்கின்றனர். ஒப்புரவாகி சமாதானமாக வாழ, முரண்பாடுகள் தீர இதுவே காரணமாகும். "வெளி வேடக்காரரே முதலில் உங்கள் கண்ணிலிருந்து மரக்கட்டையை எடுத்தெறியுங்கள் அதன் பின் உங்கள் சகோ

அளவையூர் அமலன்

தரர் அல்லது சகோதரியின் கண்ணிலிருந்து துரும்பை எடுக்க உங்களுக்குத் தெளிவாய்க் கண் தெரியும்" (மத் 07:05). தன் சகோதரனோ அல்லது அடுத்திருப்பவரோ எனக்கு எதிராகத் தவறிழைக்கும் போது அதை மன்னிப்பதும் மறந்து போவதும் எளிதாக இருந்தாலும் ஒப்புரவாகுதல் என்பது பெரும் சவாலாகவே இருக்கின்றது. மன்னிப்பதற்கு வரையறை இல்லை என்பதை "ஏழுமுறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழுமுறை என்று இயேசு தெளிவாகக் கூறியுள்ளார்" (மத்18:21-35).

**கல்வாரியில் ஒப்புரவு**

மன்னித்து ஏற்றுக் கொள்வதால் மட்டுமே ஒப்புரவாக முடியும். இறைமகன் இயேசு கல்வாரியில் தான் இறப்பதற்கு முன் இதை வாழ்ந்து காட்டுகின்றார். தனக்குத் துன்பம் செய்த யூதர்களை, கசையடியையும், முள்முடியையும், சிலுவைமரணத்தையும், அவமானங்களையும் தாங்கிப் பெருந்தன்மையோடு மன்னிக்கின்றார்.(லூக் 23:34) இந்த மன்னிப்பின் ஊடாக அவர்களோடு ஒப்புரவு கொண்டு அவர்களையும் இறையாட்சி வாழ்வுக்கு அழைத்து நிற்கின்றார். தனக்கு எதிராகப் பாவம் செய்து மன்னிப்புக் கோரிய கள்வனுக்கு முழுமையான மன்னிப்பு வழங்கி அவனுக்கு நிலைவாழ்வை உரிமையாக்குகின்றார். (லூக் 23:31-43) அவனோடும் ஆண்டவர் இயேசு ஒப்புரவாகின்றார். தனக்குத் துன்பங்கள் தந்தவர்களையும் தனக்கு எதிராகப் பாவம் செய்தவர்களையும் மன்னித்துத் தான் ஒப்புரவாகியது போல நாமும் வாழ வேண்டும் என்று விரும்புகின்றார்.

**முடிவாக**

மன்னிப்பு என்கின்ற உன்னதமான கிறிஸ்தவ மதிப்பீடு எமது வாழ்வில் இழையோடுகின்ற பொழுதுதான் நாம் அனைவரோடும் ஒப்புரவாக முடியும். சாதாரண மனித வாழ்வில் இது மிகக் கடினமாக இருந்தாலும் இறையருளின் துணையோடு நாம் இவற்றைக் கைக் கொள்ள முடியும். முதலில் எமது குடும்ப உறவுகளுக்குள் மன்னிப்பையும் தொடர்ந்து ஒப்புரவையும் ஏற்படுத்துவோம். அடுத்து நாம் வாழும் சூழலிலும், எமது பங்குத் திருஅவையிலும், நாம் பணி செய்யும் இடங்களிலும் கடைப் பிடிப்போம். உண்மையான மன்னிப்பின் ஊடாகவும் அதனைத் தொடர்ந்து வரும் ஒப்புரவின் ஊடாகவும் இத்தவக்காலத்தில் இறையாட்சி மலர்ந்து மணம்வீச உழைப்போம்.

# மறைவாழ்வில் புதிய முன்னேற்றங்கள்



## யாழ். மறைமாவட்ட முதல் சுதேச ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.

யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட (மன்னார், அனுராாதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கியிருந்த அக்கால)த் திருஅவையின் முதல் சுதேச ஆயரான ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி. யின்(1901 - 1972) மறைவின் 50 வருடங்களை நெருங்கிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் (17 யூலை 2022) எமது இளையோர் சமூகமும் எதிர்கால சமூகமும் இவரது வாழ்வும் பணியும் பற்றி அறிய வேண்டும் என்பதற்காக விசேடமாகத் தனியார் பாடசாலைக் கல்வியே நல்லொழுக்கத்திற்கு அடிப்படை என்னும் இவரது கொள்கைப்பிடிப்புடனான வாழ்வும் பணியும் ஆறு தலைப்புகளின் கீழ் தொடர்கட்டுரையாகத் தரப்படுகின்றது.

**திருவிவிலியப் பயன்பாடு**

நம்மக்களின் வாழ்க்கை நிலை பற்றி இருவரும், மத்திய கல்லூரி முன்னாள் அதிபர் தம்பர் மற்றும் பிரமுகர்களுடன் ஆழமான நட்புறிமையுடன் கலந்துரையாடுவர். முன்னாள் தென்னிந்தியத் திருச்சபைத் தலைவர் ஆயர் சபாபதி குலேந்திரனும் வண. D.T. நைல்சும் ஆயர் எமிலின் வளலாய் இல்லத்திற்கு அருகிலேயே தமது இளைப்பாறி விடுதிகளையும் அமைத்துக் கொண்டனர். அடிக்கடி எமில் இரவு வேளைகளில் இவர்களைச் சந்தித்து உரையாடுவார்"(யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு, 102 பிரதான வீதி, யாழ்ப்பாணம், 1997 பக். 208), எனச் சொல்கின்றார்.

**கிறிஸ்தவரல்லாதோருடன் உறவு**

ஆறுமுக நாவலர் காலத்தில் சைவ சமய எழுச்சியும் அநாகரிக தர்மபாலா காலத்தில் பௌத் த சமய எழுச்சியும் முறுகல் நிலையைத் தோற்றுவித்திருந்தாலும், பின்னர் இவரது காலத்தில், நட்புறவைப் பேண இவர் முயற்சித்திருந்தார். ஆயினும் ஒருசிலர் தமது சுயநலம், சுயகௌரவத்தின் பொருட்டு இடையூறாக இருந்தமையும் கண்கூடு. சுவாமி ஜோ.இ. ஜெயசீலன் மீண்டும் பின்வருமாறு விளக்குகிறார்.

"திரு. சி. சுவாமிநாதன் மட்டு மல்ல, செந்தில்நாத ஐயர், சேர். பொன். இராமநாதனின் மருமகன்(பின்னர் பா. உ.) நடேசன், சட்டத்தரணி பாலரத்தினம், அடங்காத் தமிழன் பேரசியர் சுந்தரலிங்கம், ஆ. பூபாலசிங்கம், சட்டத்தரணி S. சிவசுப்பிரமணியம் போன்ற பல சைவப் பெருமக்களை (இவர்களில் பலர் கல்விமான்கள்) அவர் கல்வி பயின்ற காலந்தொட்டும் பின்னரும் நன் கறிந்திருந்தார்.

இந்த நல்லுறவுகள் பின்பு பலன் கொடுக்கத் தொடங்கின" (யாழ்ப்பாணத் திருச்சபை வரலாறு பக். 209). கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபராக 1935-1937வரை இருந்த காலம் முதல் இவருடன் ஆழமான உறவு வைத்திருந்த ஒருவர் யோகர் சுவாமிகள் ஆவர். இந்த நட்பு யோகர் சுவாமிகள் இறக்கும் வரை தொடர்ந்தது. ஆன்மீக விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதைத் தமது வாழ்வின் பேறாக இருவரும் கருதினர். திருவிவிலியத்தைக் கற்றிருந்த கொழும்புத்துறைச் சித்தரான யோகர் சுவாமிகள் தன்னுடன் ஒரு பிரதியையும் தலைமாட்டில் வைத்திருந்தார். ஆயரை விமர்சிப்பவர்கள் யாராவது தம்மிடம் வரும் போது அவர்களுடன் வாதாடி இவருக்காகக் கதைப்பவராகவும், அவர்கள் இவரைப் பற்றிக் கொண்டிருந்த தப்பபிராயங்களைக் களைந்து அவர்களை நல்லமனதுடன் திருப்பி அனுப்புபவராகவும், சைவ-கத்தோலிக்க உறவு வளர வழிவகுப்பவராகவும் விளங்கினார்.

சமய உரையாடல்களில் ஆர்வமாய் இருந்த இவர் 1966 ஏப்ரல் 20இல் யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்ற சர்வ மத சமரச மாநாட்டில் சமயத் தலைவர்கள் மத்தியில், சமயப் புரிந்துணர்வு பற்றி ஆற்றிய சிறப்புரை பலராலும் பாராட்டுப் பெற்றது. இவர் கூறும் போது, "சமீப காலத்தில் வத்திக்கான சங்கம் நிறைவேற்றிய தீர்மானங்களும், பரிசுத்த பாப்பரசரால் மேற்றி

அருட்பணி சி.ஜே.அன்ரனி பாலா

ராணிமாரான எங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகளும், தற்போதய நல்லுறவு இயக்கத்தில் இதயபூர்வமாக நாம் கலந்து கொள்ளவும் கிறிஸ்தவ சபைகளுக்கிடையில் ஒற்றுமையை வளர்க்கவும் இந்து, பௌத்தம், இஸ்லாம் போன்ற சமயத் தலைவர்களுடன் மனமார்ந்த மரியாதையுடன் சேர்ந்து சேவை யாற்றவும் எமக்கு விசேஷ ஊக்கம் அளிக்கின்றன. இச்சமயங்கள் தத்தம் முறைகளில் மனிதரின் வெளிச்சமாகிய சத்தியத்தின் பிரகாசத்தைப் பிரதிபலிக்கின்றன" (பாதுகாவலன் 1966.04.03) என்றார்.

அதன் பின் மகாநாயக்க தேரர் ஸ்ரீ விப்பாசி தேரோ, அங்கிலிக்கன் அத்தியட்சகர், முஸ்லிம் நீதிபதி போன்றோரைத் தோலகட்டி செமமாலைத் துறவற சபை ஆச்சிரமத்துக்கு அழைத்துச் சென்று விருந்தளித்தார். *(தொடரும்...)*

# 'திருமறை முத்துக்கள்'

அருட்பணி. தே. யூட்நாஸ்

**ஏழாம் கட்டளை**

**245.ஏழாம் கட்டளை என்ன?** களவு செய்யாதே.

**246.ஏழாம் கட்டளை எவற்றையெல்லாம் தடை செய்கிறது?**

ஏழாம் கட்டளையானது இன்னொருவருக்குரியவற்றை அநியாயமான முறையில் வைத்திருத்தல், அபகரித்தல், எடுத்துக்கொள்வதைத் தடைசெய்கிறது.

**247.வாங்குதல், விற்றலில் ஏமாற்றுதல் ஏழாம் கட்டளை யால் தடை செய்யப்படுகின்றனவா?**

ஆம். வாங்குதல், விற்றலில் ஏமாற்றுதல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளும் ஏழாம் கட்டளையால் தடை செய்யப்படுகின்றது. அத்தோடு எமது அயலானிற்கு செய்யும் பிழையான விடயங்கள் அனைத்தையும் ஏழாம் கட்டளை தடைசெய்கிறது.

**248.பிழையான வழியில் சம்பாதித்த பொருட்களை மீளக்கொடுக்க நாம் கடமைப்பட்டுள்ளோமா?**

ஆம், பிழையான வழியில் நாம் சம்பாதித்த பொருட்களை எங்களால் முடியுமானால் வேறு வழிகளில் மீளக் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் மீளக்கொடுக்கவில்லை என்றால் அப்பாவம் மன்னிக்கப்படாது. அதற்குரிய தண்டனையை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**249.தொழிலாளர்கள் தங்களது நேரத்தையும் சொத்துக்களையும் வீண்விரயம் செய்வது நேர்மை யற்ற செயலா?**

தொழிலாளர்கள் தங்களது நேரம், சொத்துக்களை வீண்விரயம் செய்வது நேர்மையற்ற செயலாகும். ஏனெனில் அவர்கள் விரயம் செய்வது அவர்களுடைய சொத்தோ நேரமோ அல்ல.

**எட்டாம் கட்டளை**

**250.எட்டாம் கட்டளை என்ன?**

பிறருக்கு எதிராக பொய்ச்சாட்சி சொல்லாதே.

**251.எட்டாம் கட்டளை எவற்றையெல்லாம் தடை செய்கிறது?** எட்டாம் கட்டளையானது அனைத்து வகையான பொய்ச்சாட்சிகளையும், கொடூரமான தீர்ப்புக்களையும், பொய்களையும் தடைசெய்கிறது.

*(தொடரும்...)*

## அர்த்தமுள்ள ஆன்மீகம்

# நலம் தரும் நம்பிக்கை

பகுதி 09

அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்

### மனமாற்றம்

கடந்த பல செய்திகளில் நலம் தரும் நம்பிக்கை என்ற தலைப்பில் வேதம் கூறும் நம்பிக்கையால் நலம் பெற்ற பலரைப் பார்த்தோம். அந்த வகையில் வித்தியாசமான ஒரு விவிலிய நபரை நாம் இன்று பார்ப்போம்.

இறைவனின் இரக்கத்திற்கு அளவும் இல்லை! எல்லையும் இல்லை! இரக்கம் காட்டுவதில் நல்லவர் தீயவர் என்று அவர் வேற்றுமை காட்டுவதுமில்லை. அவரது வார்த்தையைக் கேட்டு மனம் மாறும் அனைவரையும் மன்னித்து அரவணைப்பதே அவரது இயல்பு. பாவிகளின் அழிவையல்ல, அவர்களது மனமாற்றத்தையே இறைவன் விரும்புகின்றார். நீரையும் நிலத்தையும் படைத்த விண்ணகக் கடவுளாகிய ஆண்டவரை வழிபடும் அமித்தாயின் மகன் யோனாவுக்கு ஆண்டவரின் வாக்குப் பின்வருமாறு அருளப்பட்டது. “நீ புறப்பட்டு நினிவே மாநகருக்குப் போய் அதற்கு அழிவு வரப்போகிறது என்று அங்குள்ளோருக்கு அறிவி. அவர்கள் செய்யும் தீமைகள் என் முன்னே வந்து குவிகின்றன.” (யோனா 1:2-2) இந்தச் செய்தி யோனாவுக்கு ஓர் அழைப்பாகவும் நினிவேக்கு மனமாற்றத்துக்கான செய்தியாகவும் அமைந்திருந்தது.

ஆனால் யோனாவோ நினிவேக்குச் செல்லவும் செய்தியை அறிவிக்கவும் அச்சமுறுகிறார். இதற்கான காரணம் குறிப்பிடப்படாவிட்டாலும், அங்கே சென்று இதை அறிவிப்பதால் தனக்கு ஏதும் ஆபத்து நேர்ந்து விடலாமோ என்று கூட எண்ணியிருக்கலாம். பிறகு இறை அழைத்தலைப் புறக்கணித்து அதிலிருந்து நழுவி விட நினைக்கிறார். இன்று நம்மில் பலரும் இறை பக்தர்கள் என்று வாழ்ந்தாலும் கூட பிறர் அன்பு தொடர்பான இறை அழைப்புக்களிலிருந்து பல்வேறு சந்தர்ப்பங்களில் சுய நலத்தால் விலகி ஓடப் பார்க்கிறோம்.

இதனால் சோதனைகளும் வேதனைகளும் ஏதோ ஒரு வகையில் நம்மைப் பின் தொடர்கின்றன. இவை மனமாற்றத்துக்கான தூண்டுதல்களாகக் கூட இருக்கலாம். இவ்வாறே இறை அழைத்தலிலிருந்து யோனாவும் தப்பியோட முயல்கின்றார். ஆண்டவர் குறிப்பிட்ட நினிவே நகருக்குச் செல்லாமல் வேறு திசையில் செல்கிறார். யோப்பாவுக்குப் போய் அங்கே தர்சிசுக்குப் புறப்பட இருந்த கப்பலுக்குக் கட்டணம் செலுத்தி ஆண்டவர் திருமுன்னிலிருந்து தப்பிச் செல்கிறார். ஓர் இனத்தின் மீட்பின் கருவியாகத் தெரிந்து கொண்ட தன் அடியவனை அவன் கைவிட்டாலும் ஆண்டவர் கைவிடுவதில்லை. அதன் வழியாக அவர் வைத்துள்ள திட்டம் நிறை வேறியே தீரும். யோனா சென்ற கப்பல் கடலில் செல்லும் போது ஆண்டவர் கடலில் கடும் காற்று வீசும்படி செய்தார். கப்பலில் இருந்த ஒவ்வொருவரும் தத்தம் தெய்வத்தை நோக்கி மன்றாடியதோடு கப்பலின் பாரத்தைக் குறைக்க பாரமான பொருட்களை கடலில் தூக்கி எறிந்தார்கள்.

இவற்றை உணராத யோனா கப்பலின் அடியில் தூங்கிக் கொண்டு இருக்கிறார். கப்பல் தலைவன் “உன் தெய்வத்தை நோக்கி மன்றாடு! ஒரு வேளை நாம் காப்பாற்றப்பட லாம்” என்றான். (யோ 1:6) கப்பலில் இருந்தவர்கள் இத் தீங்கு யாரால் வந்தது என்று சீட்டுப் போட்டுப் பார்க்க, அது யோனாவின் பெயருக்கு விழுந்தது. அப்பொழுது அவர்கள் நீ யார் ? எங்கிருந்து வருகிறாய்? என்றெல்லாம் விசாரிக்கிறார்கள். அதற்கு யோனா, தான் ஓர் எபிரே-யன், நீரையும் நிலத்தையும் படைத்த விண்ணகக் கடவுளாகிய தனது கடவுளை வழிபடுபவன் என்று தனது இறைவனைப் பறைசாற்றியதோடு அவ ருக்கு அஞ்சியே தப்பி ஓடி வந்ததாகவும் கூறுகிறார்.

இந்த தண்டனையிலிருந்து விடுபட என்னை கடலில் தூக்கி எறிந்து விடுங்கள் என்றும் வேண்டுகிறார். கடல் அலை ஓயாதிருக்கவே அவர்கள் இறை வேண்டல் செய்து யோனாவைக் கடலில் வீசிவிடுகிறார்கள். அப்போது ஆண்டவர் திட்டப்படி ஒரு பெரிய மீன் யோனாவை விழுங்க மூன்று நாட்கள் அவர் அதன் வயிறில் இருந்தார். மீனின் வயிற்றில் இருந்தாலும் இறைஉறவைப் பிரிய விரும்பாத யோனா இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடிப் பல பொருத்தனைகளையும் செய்து கொண்டார். ஆண்டவர் மீனுக்குக் கட்டளையிட அது யோனாவைத் தரையிலே கக்கியது. ஆண்டவர் மீண்டும் யோனாவை நோக்கி நீ நினிவேக்குச் சென்று வரப்போகும் அழிவுபற்றி அறிவி என்றார்.

யோனாவும் நினிவேக்குச் சென்று உத்த குரலில் இன்னும் நாற்பது நாட்களில் நினிவே அழிக்கப்படும் என்றும் அறிவித்தார் (யோனா3:4) நினிவே மக்கள் கடவுளின் செய்தியை நம்பி சாக்கு உடை அணிந்து, சாம்பல் மீது அமர்ந்து, விரதம் இருந்து, நோன்பைக் கடைப்பிடித்தனர். நினிவே அரசன் முதல் மக்களும் விலங்குகளும் கூட, கடும் நோன்பில் ஈடுபட்டனர். அவர்களது மனமாற்றத்தைக் கண்டு இரங்கிய இறைவன் இவர்கள்மீது அனுப்ப இருந்த தண்டனையை விலக்கி இரக்கம் காட்டினார்.

*(தொடரும்...)*




# என் கேள்விக்கென்ன பதில்!

அருட்பணி செ. அன்புராசா

*(ராஜீ, யாழ்ப்பாணம்)*

**கே: தபசு காலத்தில் பலரும் நோன்பிருக்கின்றார்கள். நோன்பில் பலவகை உண்டு என நினைக்கின்றேன்! எவ்வகை நோன்பு சிறந்தது என நினைக்கின்றீர்கள்?**

**ப:** ராஜீ, காயப்படுத்தும் சொற்களிலிருந்து நோன்பிருந்து கனிவான சொற்களை பேசுதல், சோகமான வாழ்க்கை நிலையிலிருந்து நோன்பிருந்து வாழ்வை நன்றியுணர்வால் நிரப்புதல், கோபத்திலிருந்து நோன்பிருந்து பொறுமையாய் வாழுதல், எதிர்மறை எண்ணங்களிலிருந்து நோன்பிருந்து எதிர்நோக்கால் வாழ்வை நிரப்புதல், கவலைகளிலிருந்து நோன்பிருந்து இறைவன்மீது நம்பிக்கை கொள்ளல், புலம்புவதிலிருந்து நோன்பிருந்து எளிமையைத் தியானித்தல், மன அழுத்தத்திலிருந்து நோன்பிருந்து இறை வேண்டலில் ஈடுபடல், மனக் கசப்புகளிலிருந்து நோன்பிருந்து மகிழ்வால் மனத்தை நிரப்புதல், சுயநலத்திலிருந்து நோன்பிருந்து பரிவிரக்கத்தோடு வாழுதல், காழ்ப்புணர்ச்சியிலிருந்து நோன்பிருந்து ஒப்புரவாகுதல், சொற்களிலிருந்து நோன்பிருந்து மௌனத்தில் கவனித்தல் என நோன்பின் புதிய வடிவத்தைத் திருத்தந்தை பிரான்சிஸ் காலத்தின் தேவையுணர்ந்து ஆக்கியளித்துள்ளார். இவ்வகை நோன்பு உடலையல்ல உள்ளங்களைக் கிழித்துக்கொள்ளுங்கள் என்ற இயேசுவின் வார்த்தைகளை ஒத்ததே!

*(துசி, மன்னார்)*

**கே: உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடக்கப்போகின்றது. வாக்குறுதிகளைப் பார்த்தால் தேர்தலில் தாங்கள் தெரிவாகினால் அடுத்த நாளே தங்கள் பிரதேசத்தை அபிவிருத்தி அடையச்செய்து விடுபவர்கள்போல பலரும் பிதற்றித்திரிகின்றார்கள். ஏமாற்றுப் பேர்வளிகள்தான் இப்போது அதிகம். இந்நிலையில் யாருக்கு வாக்களிக்கலாம்?**

**ப:** துசி, முதலில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மக்கள் எதிர்பார்க்கின்ற வேகத்தில் நடக்குமா என்பது கேள்விக்குறி! நடக்கும் ஆனால் எப்போது என்பதுதான் தெரியவில்லை. சில மாதங்கள் ஆகலாம், ஓராண்டாகலாம், ஏன் அதற்கு அப்பாலும் போகலாம்! நிற்க, நடந்தால் யாருக்கு வாக்களிக்கவேண்டும் என்றுதானே கேட்கின்றீர்கள்? சொல்கின்றேன். துருக்கி நாட்டுப் பழமொழி ஒன்றின் ஊடாக வருகின்ற சிந்தனை இக்கட்டத்தில் நமக்கு உதவி செய்யும் என நம்புகின்றேன், துசி. அச்சிந்தனை இதுதான்: “காடுகளில் மரங்கள் படிப்படியாக அழிந்துகொண்டு வந்தன. ஆனால், மரங்கள் கோடரிக்கே வாக்களித்தன. ஏனென்றால், மரத்தால் செய்யப்பட்ட கைப்பிடியை மரங்களுக்குக் காட்டி, ‘நானும் உங்களில் ஒருவன்தான்’ எனக் கோடரி கூறியதை நம்பி மரங்கள் காலாகாலமாக ஏமாந்து வந்தன!” துருக்கிச் சிந்தனை நம் துருப்பிடித்த புத்தியைச் துலங்கச் செய்யவேண்டும்! விளங்குகின்றதா துசி? விளங்கினால் நீரும் விளக்காக இரும்!

*(விஜி, யாழ்ப்பாணம்)*

**கே: ‘அன்புள்ள ஆரியசிங்க’ என்ற உங்கள் கடிதம் அடங்கிய நூல் மும்மொழிகளில் வெளிவந்துள்ளது. இந்நூலுக்கான வரவேற்பு தமிழ்மக்களைப் பொறுத்தவரை மிகச் சிறப்பாக இருக்கின்றது. அதேவேளை, தென் பகுதி சிங்கள மக்களைப் பொறுத்தவரை எப்படி இருக்கின்றது என்பதைக் கூறமுடியுமா?**

**ப:** விஜி, இந்நூலுக்கான வரவேற்பு நீங்கள் சொன்னதுபோல தமிழ்மக்களால் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. அதேவேளை சிங்கள மக்கள் மத்தியில் இப்போதுதான் இந்நூல் சென்றுகொண்டிருக்கின்றது. அவர்களும் இதனை வரவேற்பதாகவே ஆரம்பகட்ட அறிகுறிகள் தெரிவிக்கின்றன. சிலரிடமிருந்து வந்த பின்னூட்டல்கள் அதனையே கோடிட்டும் காட்டுகின்றன. அதேவேளை, விஜி, இந்நூலைப் படிக்கின்ற எல்லோரும் தங்கள் அபிப்பிராயங்களையும் கருத்துக்களையும் வெளிப்படையாகத் தெரிவிக்கின்ற போதுதான் நமது பிரச்சினைகளைப் பற்றி, அபிலாஷைகளைப் பற்றித் தொடர்ந்து பேசமுடியும்.

*(எமில், யாழ்ப்பாணம்)*

**கே: இத்தனை பதில்களை எழுதுகின்றீர்கள். உண்மையில், இத்தனை கேள்விகளையும் வாசகர்கள் எழுதி அனுப்புகின்றார்களா?**

**ப:** எமில், நீங்கள் இக்கேள்வியை எழுதியா கேட்டிருக்கின்றீர்கள்! இல்லையே! என்னோடு கதைத்துக் கொண்டிருந்தபோது இக்கேள்வியைக் கேட்டீர்கள். அதுபோலதான், பலரும் என்னைச் சந்திக்கின்றபோது பல கேள்விகளைக் கேட்கின்றார்கள், அவற்றுக்குப் பதில் எழுதுகின்றேன். அதுபோல, இன்னும் சிலர் பதில்களைக் சொல்லுகின்றார்கள், அவற்றுக்கு கேள்விகள் வேண்டுமல்லவா! அக்கேள்விகளை நான் அமைத்துக்கொள்கின்றேன். புரிகிறதா எமில்?

*(யோசப், யாழ்ப்பாணம்)*

**கே: ‘அன்புள்ள ஆரியசிங்க’ என்ற கடிதங்கள் அடங்கிய உங்கள் நூல் தமிழிலும் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் என மும்மொழியில் ஒரே நேரத்தில் வெளிவந்துள்ளது. இவ்வாறு ஒரு வெளியீடு இதுவரையில் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அதுவும் இம்மூன்று நூல்களும் நமது மண்ணின், மக்களின் அடிப்படையான பிரச்சினைகளைப்பற்றிப் பேசுகின்றது. மேலும், இந்நூல்கள் மூன்றும், யாழ்ப்பாணத்தி லேயே மிக நேர்த்தியாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதனை உங்களின் ஒரு சாதனையாகக் கொள்கின்றீர்களா?**

**ப:** சும்மா போங்க யோசப்! நானென்ன உலக சாதனையா புரிந்துவிட்டேன்! யோசப், இதனை, நான் ஒரு சாதனையா-கப் பார்க்கவில்லை! இவ்வாறான ஒரு வரலாற்றுக் கடமையை ஆற்றுவதற்கு எனக்கு எண்ணம் வந்தபோது அதனைச் சரியாகப் பயன்படுத்தி ஒரு காலத்தின் கட்டாயப் பணியைச்செய்து முடித்திருக்கின்றேன் என்ற திருப்திதான் எனக்குள் எழுகின்றது.

## பதினாறாம்.....

(3ம் பக்கத் தொடர்ந்சி)

**முடிவாக**

விண்ணில் சுதந்திரமாகப் பறக்க விரும்பும் ஒரு பறவையை, வீட்டில் ஒரு கூண்டில் வைத்து அழகு பார்க்கலாமா? சமுத்திரத்தில் நீந்தி விளையாட விரும்பும் ஒரு மீனை வீட்டு மீன்தொட்டியில் போட்டு அழகு பார்காகலாமா? யாருடைய தேவை-கள் பூர்த்தியாக்கப்படுகின்றன? அதற்காக யாருடைய வாழ்வு பலியாக்கப்படுகின்றது.

இது அர்ப்பணமா? தியாகமா? இது அமைச்சலா? இதை இறைவனது சித்தம் அன்றேல் இறைத்திட்டம் என்று கூறுவது ஆன்மீகப்படுத்துவதாகாதா? (Spritualize) இறைத்திட்டம் முறையாக உய்த்துணரப்பட்டதா? முன்னர் செய்யப் படாவிட்டாலும், இறுதியில் இரா ஜினா-மாச் செய்யும் முன்னர் உய்த்துணர்ந்து தான் செயற்பட்டார். தனது கல்விப் பணியை புரட்சியில் தொடங்கி தான் விரும்பாத நிர்வாகப்பணியில் தடம்புரண்டு இறுதியில் துணிவுடன் ஒரு புரட்சியான முடிவோடு தனது வாழ்வை முடித்துக் கொண்டார். ஜோசவ் றட்சிங்கர். திருஅவையின் ஒரு யுகம் முடிந்தது.

# யாழ் மறைமாவட்ட பங்குகளின் விசேட நிதி சேகரிப்பு - 2022

| இல | பங்கு | திருப்பாலத்துவ தினம் | பரிசுத்த வாரம் | இறை அழைத்தல் தினம் | பாப்பரசர் தினம் | சுதேச குருக்கள் தினம் | மறைபரப்பு ஞாயிறு | நல்லாயன் நிதியம் | கிறிஸ்மஸ் தினம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **யாழ். மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | பேராலயம் | 42,000.00 | 75,000.00 | 52,600.00 | 34,260.00 | 37,900.00 | 182,000.00 | 40,000.00 | 101,000.00 |
| 2. | குருநகர் | 34,650.00 | 74,000.00 | 36,670.00 | 12,000.00 | 25,500.00 | 123,000.00 | 66,260.00 | 57,000.00 |
| 3. | அடைக்கல அன்னை ஆலயம் | 23,400.00 | 56,600.00 | 28,000.00 | 23,000.00 | 25,180.00 | 38,000.00 | 26,340.00 | 47,000.00 |
| 4. | பாஷையூர் | 15,200.00 | 112,500.00 | 12,000.00 | 10,500.00 | 11,000.00 | 20,500.00 | 35,360.00 | 62,000.00 |
| 5. | நாவாந்துறை | 15,000.00 | 52,000.00 | 33,100.00 | 3,500.00 | 24,000.00 | 210,000.00 | 59,000.00 | 42,250.00 |
| 6. | அஞ்சனந்தாழ்வு | 4,780.00 | 8,250.00 | 3,110.00 | 3,400.00 | 3,290.00 | 7,460.00 | 4,910.00 | 4,500.00 |
| 7. | பண்டியன்தாழ்வு | 10,600.00 | 15,100.00 | 5,750.00 | 4,000.00 | 3,070.00 | 15,000.00 | 7,150.00 | 11,210.00 |
| 8. | கொழும்புத்துறை | 13,700.00 | 20,000.00 | 14,000.00 | 7,000.00 | 12,000.00 | 12,000.00 | 15,000.00 | 12,000.00 |
| 9. | கொய்யாத்தோட்டம் | 6,710.00 | 20,000.00 | 20,000.00 | 6,000.00 | 16,500.00 | 22,000.00 | 20,000.00 | 17,400.00 |
| 10. | திருநெல்வேலி | 6,875.00 | 9,480.00 | 3,230.00 | 2,360.00 | 1,960.00 | 4,060.00 | 3,300.00 | 5,130.00 |
| 11. | கோப்பாய் | 7,500.00 | 56,125.00 | 12,185.00 | 6,010.00 | 9,940.00 | 13,060.00 | 6,500.00 | 17,250.00 |
| 12. | சுண்டிக்குளி | 13,160.00 | 12,140.00 | 14,350.00 | 8,000.00 | 10,800.00 | 14,580.00 | 10,945.00 | 18,600.00 |
| 13. | நல்லூர் | 6,180.00 | 10,650.00 | 4,200.00 | 3,640.00 | 4,020.00 | 5,000.00 | 76,100.00 | 6,200.00 |
| 14. | மணியந்தோட்டம் | 13,820.00 | 26,070.00 | 8,100.00 | 6,220.00 | 9,200.00 | 18,100.00 | 6,150.00 | 17,200.00 |
| 15. | திரேசாள் ஆலயம்-றக்கா வீதி | 5,000.00 | 18,000.00 | 5,500.00 | 7,500.00 | 6,000.00 | 10,300.00 | 15,000.00 | 12,740.00 |
| | **தீவக மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | மண்டைதீவு - அல்லைப்பிட்டி | 15,200.00 | 40,100.00 | 20,200.00 | 21,300.00 | 19,200.00 | 36,200.00 | 33,000.00 | 31,000.00 |
| 2. | கரம்பன் | 3,500.00 | 5,347.00 | 5,300.00 | 2,500.00 | 3,500.00 | 4,000.00 | 6,500.00 | 6,000.00 |
| 3. | நாரந்தனை | 3,000.00 | 11,000.00 | 5,500.00 | 3,000.00 | 3,000.00 | 25,000.00 | 3,500.00 | 4,000.00 |
| 4. | ஊர்காவற்துறை | 17,000.00 | 43,650.00 | 19,160.00 | 20,500.00 | 22,000.00 | 102,150.00 | 13,000.00 | 23,000.00 |
| 5. | நெடுந்தீவு | 27,260.00 | 30,000.00 | 15,000.00 | 25,000.00 | 25,000.00 | 100,000.00 | 20,000.00 | 20,000.00 |
| 6. | சாட்டி - மண்கும்பான் | 11,040.00 | 13,830.00 | 26,350.00 | 8,260.00 | 16,380.00 | 14,720.00 | 14,700.00 | 18,700.00 |
| 7. | புங்குடுதீவு | - | 15,000.00 | 10,000.00 | 2,500.00 | 3,000.00 | 8,500.00 | 3,400.00 | 10,000.00 |
| 8. | எழுவைதீவு | - | 10,600.00 | 1,500.00 | 1,500.00 | 2,000.00 | 10,000.00 | 3,000.00 | 4,000.00 |
| | **இளவாலை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | இளவாலை-அன்னம்மாள்ஆலயம் | 7,580.00 | 21,000.00 | 12,190.00 | 4,140.00 | 4,000.00 | 16,800.00 | 16,230.00 | 5,500.00 |
| 2. | இளவாலை - யாகப்பர் ஆலயம் | 4,000.00 | 23,400.00 | 6,000.00 | 4,000.00 | 5,200.00 | 7,000.00 | 7,000.00 | 7,000.00 |
| 3. | மாதகல் | 13,280.00 | 33,760.00 | 16,670.00 | 7,000.00 | 12,200.00 | 23,700.00 | 17,000.00 | 12,200.00 |
| 4. | சில்லாலை | 4,500.00 | 24,800.00 | 17,100.00 | 7,650.00 | 7,350.00 | 9,170.00 | 17,000.00 | 19,200.00 |
| 5. | பண்டத்தரிப்பு | 3,200.00 | 7,200.00 | 4,200.00 | 7,000.00 | 6,500.00 | 17,000.00 | 15,000.00 | 16,000.00 |
| 6. | விளான் | 7,970.00 | 22,400.00 | 10,560.00 | 5,300.00 | 6,800.00 | 21,800.00 | 6,700.00 | 20,520.00 |
| 7. | மானிப்பாய் | 26,000.00 | 43,500.00 | 15,000.00 | 18,500.00 | 22,500.00 | 23,000.00 | 22,000.00 | 30,000.00 |
| 8. | மாரீசன்கூடல் | 8,000.00 | 34,430.00 | 16,700.00 | 7,000.00 | 6,000.00 | 10,400.00 | 14,000.00 | 12,000.00 |
| 9. | உரும்பிராய் | 12,000.00 | 10,000.00 | 10,000.00 | 8,300.00 | 10,900.00 | 15,000.00 | 10,000.00 | 26,150.00 |
| 10. | ஆனைக்கோட்டை | 10,000.00 | 40,000.00 | 10,000.00 | 5,000.00 | 8,500.00 | 7,000.00 | 15,000.00 | 25,000.00 |
| 11. | குளமங்கால் | 5,500.00 | 25,000.00 | 20,000.00 | 6,000.00 | 8,500.00 | 120,000.00 | 14,000.00 | 11,000.00 |
| 12. | மல்வம் - உடுவில் | 5,000.00 | 23,760.00 | 7,500.00 | 11,880.00 | 7,500.00 | 20,820.00 | 35,000.00 | 15,000.00 |
| 13. | சுன்னாகம் | 15,000.00 | 39,600.00 | 13,500.00 | 9,080.00 | 5,210.00 | 66,320.00 | 13,730.00 | 21,920.00 |
| 14. | நவாலி | 11,040.00 | 35,000.00 | 5,400.00 | 3,250.00 | 4,560.00 | 13,540.00 | 117,500.00 | 4,500.00 |
| | **பருத்தித்துறை மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | பருத்தித்துறை | 7,250.00 | 40,000.00 | 12,100.00 | 10,400.00 | 21,500.00 | 42,000.00 | 26,500.00 | 36,440.00 |
| 2. | தாளையடி - செம்பியன்பற்று | 5,650.00 | 5,000.00 | 4,000.00 | 3,000.00 | 4,000.00 | 5,000.00 | 20,000.00 | 6,000.00 |
| 3. | அச்சுவேலி | 9,600.00 | 32,000.00 | 6,300.00 | 3,400.00 | 6,300.00 | 10,200.00 | 16,000.00 | 14,000.00 |
| 4. | கரவெட்டி | 10,200.00 | 7,000.00 | 10,000.00 | 6,000.00 | 10,000.00 | 8,500.00 | 30,000.00 | 9,000.00 |
| 5. | மிருசுவில் | 10,000.00 | 26,500.00 | 11,000.00 | 7,000.00 | 30,000.00 | 16,500.00 | 18,000.00 | 30,000.00 |
| 6. | சாவகச்சேரி | 13,160.00 | 35,440.00 | 16,210.00 | 10,720.00 | 20,320.00 | 20,160.00 | 13,350.00 | 27,350.00 |
| 7. | மணற்காடு | 5,000.00 | 10,000.00 | 5,000.00 | 10,000.00 | 10,300.00 | 17,300.00 | 9,500.00 | 17,000.00 |
| 8. | சக்கோட்டை | 17,530.00 | 42,000.00 | 3,810.00 | - | - | 14,210.00 | - | 45,500.00 |
| 9. | பளை. முகமாலை | 6,000.00 | 21,000.00 | 10,000.00 | 4,000.00 | 8,000.00 | 10,000.00 | 38,000.00 | 14,000.00 |
| 10. | கட்டைக்காடு | 5,000.00 | 12,000.00 | 3,000.00 | 4,000.00 | 4,000.00 | 5,000.00 | 11,000.00 | 7,000.00 |
| 11. | ஊறணி | 6,220.00 | 30,000.00 | 5,110.00 | 4,750.00 | 4,550.00 | 3,310.00 | 10,240.00 | 23,670.00 |
| 12. | ஒட்டகப்புலம் | - | 3,200.00 | 1,100.00 | - | - | 2,600.00 | 2,670.00 | 3,740.00 |
| | **கிளிநொச்சி மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | கிளிநொச்சி | 13,000.00 | 45,000.00 | 16,590.00 | 8,000.00 | 6,000.00 | 12,000.00 | 11,500.00 | 20,500.00 |
| 2. | வலைப்பாடு | 4,000.00 | 15,000.00 | 5,000.00 | 2,500.00 | 2,500.00 | 92,000.00 | 4,000.00 | 10,000.00 |
| 3. | உருத்திரபுரம் | 5,540.00 | 17,500.00 | 11,000.00 | 5,450.00 | 5,650.00 | 5,660.00 | 5,000.00 | 12,000.00 |
| 4. | வட்டக்கச்சி | 3,710.00 | 11,000.00 | 7,000.00 | 6,000.00 | 4,800.00 | 10,000.00 | 6,000.00 | 7,000.00 |
| 5. | அக்கராயன் | 5,000.00 | 16,500.00 | 4,000.00 | 4,000.00 | 4,000.00 | 4,800.00 | 5,200.00 | 13,150.00 |
| 6. | மல்லாவி | 1,300.00 | 8,000.00 | 1,500.00 | 1,000.00 | 600.00 | 1,000.00 | 2,000.00 | 6,100.00 |
| 7. | முழங்காவில் | 8,000.00 | 14,000.00 | 6,500.00 | 2,000.00 | 9,000.00 | 12,000.00 | 10,000.00 | 11,000.00 |
| 8. | குமுழமுனை | 14,060.00 | 10,100.00 | 3,400.00 | 2,800.00 | 3,000.00 | 4,500.00 | 4,000.00 | 6,000.00 |
| 9. | பூநகரி | 2,600.00 | 7,300.00 | 2,400.00 | 2,300.00 | 3,600.00 | 4,300.00 | 3,200.00 | 5,500.00 |
| 10. | பரந்தன் | 4,820.00 | 17,710.00 | 10,200.00 | 4,640.00 | 7,200.00 | 22,550.00 | 8,400.00 | 3,000.00 |
| | **முல்லைத்தீவு மறைக்கோட்டம்** | | | | | | | | |
| 1. | முல்லைத்தீவு | 15,000.00 | 40,000.00 | 21,000.00 | 20,000.00 | 20,000.00 | 20,000.00 | 20,000.00 | 30,000.00 |
| 2. | புதுக்குடியிருப்பு | 14,275.00 | 45,500.00 | 16,600.00 | 13,300.00 | 14,250.00 | 18,300.00 | 11,900.00 | 30,500.00 |
| 3. | மாங்குளம் | 1,000.00 | 2,000.00 | - | - | - | 2,000.00 | 2,000.00 | 3,000.00 |
| 4. | இரணைப்பாலை | 7,000.00 | 35,000.00 | 10,000.00 | 10,000.00 | 10,000.00 | 13,500.00 | 12,000.00 | 15,000.00 |
| 5. | அளம்பில் | 27,935.00 | 19,629.00 | 30,190.00 | 9,882.00 | 17,867.00 | 22,930.00 | 7,435.00 | 18,500.00 |
| 6. | கூழாமுறிப்பு | 3,150.00 | 4,250.00 | 3,000.00 | 5,500.00 | 3,500.00 | 4,000.00 | 15,000.00 | 7,000.00 |
| 7. | கொக்கிளாய் | 2,000.00 | 11,550.00 | 1,200.00 | 1,500.00 | 2,000.00 | 2,000.00 | 2,000.00 | 2,800.00 |
| 8. | உடையார்கட்டு | 1,300.00 | 3,000.00 | 1,000.00 | 1,100.00 | 1,100.00 | 1,000.00 | 800.00 | 3,000.00 |
| 9. | தர்மபுரம் | 3,700.00 | 10,150.00 | 5,450.00 | 5,200.00 | 5,600.00 | 5,500.00 | 6,380.00 | 11,350.00 |
| 10. | உடுப்புக்குளம் | 2,885.00 | 8,830.00 | 1,785.00 | 2,200.00 | 3,500.00 | 5,660.00 | 5,275.00 | 11,240.00 |
| 11. | சிலாவத்தை | 2,000.00 | 26,000.00 | 6,500.00 | 5,000.00 | 5,000.00 | 7,500.00 | 3,000.00 | - |
| 12. | முகத்துவாரம் | 3,000.00 | 3,000.00 | 3,000.00 | 2,000.00 | 2,000.00 | 3,000.00 | - | 2,000.00 |

அருட்பணி.செ.நேசநாயகம்

நிதிமுகாமையாளர், ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

# யாழ் அடைக்கல அன்னை ஆலய
## வின்சென்டி போல் சபையின் வருடாந்த ஒன்றுகூடல்

யாழ் அடைக்கல அன்னை பந்தி வின்சென் டி போல் சபையினரின் ஒன்று கூடல் கடந்த மாதம் 25ம் திகதி நடைபெற்றது.

யாழ் அடைக்கல அன்னை ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி S.M.P.ஆனந்தகுமார் அடிகளாரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் யாழ் மறைமாவட்ட வின்சென்டி போல் சபையின் மத்திய சபையின் ஆன்ம ஆலோகர் அருட்பணி நேசநாயகம் அடிகளாரும், பிரதம விருந்தினராக பாண்டியன்தாழ்வு பங்குத்தந்தை அருட்பணி நேசராசா அடிகளாரும், மத்திய சபை செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் அயற்பந்திகளின் உறுப்பினர்களும் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

## ஆசிய முகங்களைக்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாண ராஜ்யத்தின் பாதுகாவலியான புதுமை மாதாவின் திருச் சொரூபமும் இங்கே காட்சிப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவை தவிர மரியன்னை பற்றிய திருச்சபையின் போதனைகள், திருத்தந்தையரின் திருமடல்கள், மற்றும் மரியன்னை பற்றிய பாடல்கள் மற்றும் மரியன்னை நோக்கிய செபங்கள் ஆகியவையும் இங்கே விளக்கத்தோடு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இடைநிலை குருத்துவக் கல்லூரியின் அதிபர் அருட்பந்தை சிசில் ஜோய் பெரேரா அவர்களின் நெறிப்படுத்தலில் அமைக்கப்பட்ட இந்த கண்காட்சியை காண வருவோருக்கு யாழ் மறை மாவட்டத்தை சேர்ந்த குருமாணவர்கள் உட்பட இடைநிலை குருத்துவக் கல்லூரி மாணவர்களினால் விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன.

கடந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்த மரியன்னை பற்றிய கண்காட்சி வருகின்ற பங்குனி மாதம் 26 ஆம் திகதி வரை அங்கு நடைபெறும்.

## விண்ணக வாழ்வின் 2ம் ஆண்டு நினைவுகள்

மண்ணக வாழ்வு 18 . 05 . 1942 — விண்ணக வாழ்வு 16 . 08 . 2020



மண்ணக வாழ்வு 09 . 07 . 1950 — விண்ணக வாழ்வு 25 . 3 . 2021



அமரர்
**திரு.ச.அ.சேவியர்**

அமரர்
**திருமதி. ஸ்கொலஸ்ரிக்கா சேவியர்**

**அம்மா,அப்பாவே! நீங்கள் உலக வாழ்வின் மாயைகள் நீங்கி பரலோக வாழ்வில் பரமனின் பாதங்களைத் தேடித் தஞ்சம் அடைந்துள்ளீர்கள் என்றும் உங்கள் நினைவுகளைச் சுமந்தபடி நாங்கள்...**

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 25.03.2023 சனிக்கிழமை நண்பகல் 12.10 மணியளவில் கொழும்பு–06 வெள்ளவத்தை, புனித லோறன்சியார் (St. Lawrence) ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

AD/25

42/1 கோவில் வீதி
யாழ்ப்பாணம்

46, 5/4 ஹம்டன் லேன், வெள்ளவத்தை
கொழும்பு - 06

உங்கள் பிரிவால் வாடும்
மகள், மருமகன், சகோதரி
பேரப்பிள்ளைகள்

## இளையோர் காவியம்

சில தாமதங்களுக்குப் பிறகு
பேனா எடுத்தபோது
நீ பள்ளிக்கூட புத்தகத்தை விட
அறிவுப் புத்தகத்தைப் படி

நீ முதலில் உனக்குள் தொடங்கு தேடல்
உன் சொந்த அறிவுதான் காலத்தின் பதிவு
நீ என்னைச் செதுக்காவிட்டாலும்
உன்னைச் செருக்கு

நீ மீண்டும் முயற்சிப்பது
என்பது முயற்சி - உன் முயற்சியே
முயச்சிப்பது வாழ்வின் திருப்புமுனை

நீ எழுவதில் மட்டுமல்ல
விழுவதில் கூட நகருவதுதான் இலட்சியம்

தடை நெருப்பு என்றால்
நீ நெருப்பை எரிக்கின்ற நெப்புத்தான்
விடை

நீ போகிற வழியில் - உன்னை
விசாரிக்கும் மரணம் கூட

நீ பயப்பிடாதே மரணம் கூட பொய்
என்கிறது இயேசுவின் உயிர்ப்பு
- உயிரோவியன்

## விண்ணக வாழ்வின் 2ம் ஆண்டு நினைவு

மண்ணில் 16 . 10 . 1935 — விண்ணில் 22 . 03 . 2021



அமரர்
**திருமதி. ஒலிவற்றாணி அரசநாயகம்**

பரிவோடும் பாசத்தோடும் எம்மை வழிநடாத்தி
துன்ப துயரங்கள் மத்தியில் துவண்டிடாமல்
எமக்கு வழிகாட்டிய தாயே வணங்குகின்றோம்.
இருகரம் கூப்பி இறைவனில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

மிருசுவில்

என்றும் உங்கள் நினைவில்
குடும்பத்தினர்

(AD-22)

## விண்ணக வாழ்வின் 90ம் நாள் நினைவு

மண்மகிழ 13 . 06 . 1947 — கண்நெகிழ 27 . 12 . 2022



**அன்ரன்ராஜா மேரி றோஸ்மலர்**

நாட்கள் தொண்ணூறு ஆனாலும் உங்கள் பாசநினைவுகள்
என்னைவிட்டு நீங்கவில்லை அம்மா!
கனிவான பேச்சும் அன்பான வாழ்வும்
மகனை விட்டுக்கொடுக்காத பாச உணர்வும்
என் வாழ்வில் எப்பொழுதும் என்னை வாழவைக்கும் அம்மா!
'நேர்மையாய் நடந்தீர் சமாதானத்திற்குள் பிரவேசித்து
உமது படுக்கையில் ஆண்டவரின் இன்ப சன்னிதானத்தில்
இளைப்பாறுகின்றீர்' என்ற வார்த்தை என்னை ஆறுதல்படுத்துகிறது அம்மா
ஆனாலும் என் நினைவினில் என்றும் நீங்காமல்
வாழ்கின்றீர்கள் அம்மா

என்றும் உங்கள் பாச நினைவுடன்
அன்பு மகன் விஜிதரன்

AD 28

## விண்ணக வாழ்வின் 31ம் நாள் நினைவு

அன்னை மடியில் 06 . 02 . 1946 — ஆண்டவன் மடியில் 23 . 02 . 2023



**அமரர் : திரு. கனகு இராயப்பு**

உயிர்ப்பும் உயிரும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவன் இறப்பினும் வாழ்வான்
(யோவான் 11:25)

பிதாவே! உங்கள் இதயம் வைரங்களால் ஆனது. அவை எப்போதும் உங்கள் மீது பளபளக்கும் என்று நாம் நம்புகின்றோம் அப்பா, ஆறுபிள்ளைகளைப் பெற்று ஓயாமல் உழைத்து. எங்களை கஷ்டம் தெரியாமல் வளர்த்து உங்கள் வாழ்க்கையை எங்களுக்காக தியாகம் செய்திங்களே! நீங்கள் அப்பா இல்லை. நாங்கள் பார்த்த தெய்வம்! கடவுள்! அதற்கும் மேலானவர்! எங்களுக்காக உங்கள் வாழ்கையைத் தந்து இன்று இறைவனின் சந்நிதியில் ஒய்வெடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்! உங்கள் நித்திய மோட்ச இளைப்பாற்றிக்காக இறைவனை வேண்டிநிற்கின்றோம்!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக (25.03.2023) அன்று காலை 8.00 மணிக்கு கோப்பாய் புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

(AD /24)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## விண்ணக வாழ்வின் 9ம் ஆண்டு நினைவு

மண்ணில் 06 . 02 . 1928 — விண்ணில் 28 . 03 . 2014



அமரர்
**திருமதி. அந்தோனிப்பர்னாந்து செலீனம்மா**

'ஆண்டவர் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்கவேண்டும்' (தி.பா. 27.4)

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வில் வழிகாட்டியாய்
எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு அம்மாவே நீர்
இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

5ம் வட்டாரம், மண்டைதீவு

AD -23

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்

# மரியாயின் சேனையின் ஆர்சேர்ஸ் விழா



யாழ். மறைமாவட்ட மரியாயின்சேனை வருடாந்த ஆர்சேர்ஸ் விழா கடந்த 05ஆம் திகதி யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்றது. மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை யேசுதாஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் அருட்தந்தை றெஜிராஜேஸ்வரன் அடிகள் திருப்பலியைத் தலைமை தாங்கி நிறைவேற்றினார்.

இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்டப் பங்குகளிலிருந்து 850 வரையான மரியாயின் சேனையினர் கலந்து சிறப்பித்ததுடன் கடந்த 20 வருடங்களாக யாழ். மறைமாவட்ட மரியாயின் சேனை இயக்குநராகப் பணியாற்றிய அருட்தந்தை றெஜிராஜேஸ்வரன் அடிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வும் இடம்பெற்றது.

# தர்மபுரத்தில் முதாளர் கௌரவிப்பு



தர்மபுரம் பங்கில் முன்னெடுக்கப்பட்ட மூதாளருக்கான சிறப்பு நிகழ்வு தர்மபுரம் புனித சவேரியார் ஆலயத்தில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை நிக்சன் கொலின்ஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் கொழும்பு லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பெரியகுளம், தர்மபுரம், விசுவமடு மற்றும் கல்லாறு பிரதேசங்களைச் சேர்ந்த 100வரையான மூதாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் கொழும்பு லயன்ஸ் கழகத் தலைவர் திரு. கோர்னேலியஸ் மற்றும் அவருடன் இணைந்த குழுவினரும் அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட் தந்தை போல் நட்சத்திரம் அடிகளும் கலந்து சிறப்பித்தனர்.

# பருத்தித்துறையில் பொதுநிலையினருக்கான தவக்காலத்தியானம்



பருத்தித்துறை மறைக்கோட்டத்தில் முன்னெடுக்கபட்ட பொதுநிலையினருக்கான தவக்காலத் தியானம் கடந்த 18ஆம் திகதி முகமாலை புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. மறைக்கோட் முதல்வர் அருட்தந்தை பெனற் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் அருட்தந்தை அமல்றாஜ் அடிகளின் உதவியுடன் நடைபெற்ற இத்தியானத்தில் தியான உரையை அகவொளி நிலை இயக்குநர் அருட்தந்தை டேவிட் அடிகள் வழங்கினார். இந்நிகழ்வில் 35வரையான பொதுநிலையினர் கலந்து பயனடைந்தனர்.

# யாழ். திருமறைக்கலாமன்றத்தால் பயிற்சிப்பட்டறை



யாழ். திருமறைக் கலாமன்றத்தால் முன்னெடுக்கப்பட்ட க.பொ.த உயர் தரப் பரீட்சையின் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பயிற்சிப்பட்டறை கடந்த 12ஆம் திகதி யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிப் பட்டறையில் 85வரையான மாணவர்கள் கலந்து பயனடைந்தார்கள்.

# மல்வம் – உடுவில் பங்கில் தவக்காலத்தியானம்



மல்வம் - உடுவில் பங்கில் முன்னெடுக்கப்பட்ட இளையோர்களுக்கான தவக்காலத் தியானமும், வழிகாட்டல் கருத்தமர்வும் கடந்த 12ஆம் திகதி உடுவில் புனித செபமாலை அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அடிகளின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்களான அருட்தந்தை ஜேம்ஸ்நாதன், அருட்தந்தை ஜஸ்ரின் ஆகியோர் கலந்து நிகழ்வை நெறிப்படுத்தினார்கள்.

இந்நிகழ்வில் கருத்துரைகளும், விழிப்புணர்வுச் செயற்பாடுகளும், நிறைவில் நற்கருணை வழிபாடும் நடைபெற்றதுடன் 50 வரையான இளையோர்கள் கலந்து பயனடைந்தார்கள்.

# மல்வம் – உடுவில் பங்கில் தவக்கால யாத்திரை



மல்வம் - உடுவில் பங்கு மக்களால் முன்னெடுக்கப்பட்ட தவக்கால யாத்திரை 18ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை அருட்செல்வன் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் சாட்டி புனித சிந்தாத்திரை அன்னை ஆலயத்திற்கு மேற்கொள்ளப்பட்ட இவ்யாத்திரையில் சிலுவைப்பாதைத் தியானம், நற்கருணை வழிபாடு, திருப்பலி என்பன இடம்பெற்றன. இந்நிகழ்வில் மல்வம் - உடுவில் பங்கிலுள்ள 150 வரையான இறைமக்கள் இணைந்து கொண்டனர்.

# யாழ். மறைமாவட்டக் குருக்களுக்கான கருத்தமர்வு




யாழ். மறைமாவட்டக் குருக்களுக்கான மறைப்பாடசாலை தொடர்பான சிறப்பு கருத்தமர்வு கடந்த 13ஆம் திகதி யாழ். மறைக்கல்வி நடுநிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இக் கருத்தமர்வில் இந்தியா திண்டிவனம் தமிழக ஆயர் பேரவையின் மறைக்கல்விப் பணிக்குழுப் பொதுச் செயலர் அருட்தந்தை ஜோர்ச் சின்னப்பன் அடிகள் கலந்து கருத்தமர்வை நெறிப்படுத்தினார்.

இக்கருத்தமர்வில் மறைக்கல்விப் போதனா முறைபற்றியும் அதற்காக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பாடப்புத்தகங்கள் பற்றியும் அவற்றின் பயன்பாடு பற்றியும் விளக்க உரைகள் ஆற்றப்பட்டுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

# நெடுந்தீவுப்பங்கில் மறையாசிரியர்களுக்கு கருத்தமர்வு



நெடுந்தீவுப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட மறையாசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மறைக்கல்வி மாணவர்களுக்கான கருத்தமர்வு கடந்த 14ஆம் திகதி புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெற்றது. யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நடு நிலைய இயக்குநர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளின் ஒழுங்குபடுத்தலில் பங்குத்தந்தை அருட்தந்தை விமலசேகரன் அடிகளின் உதவியுடன் நடைபெற்ற இக் கருத்தமர்வில் இந்தியா திண்டிவனம் தமிழக ஆயர்பேரவையின் மறைக்கல்வி பணிக்குழு பொதுச் செயலர் அருட்தந்தை ஜோர்ச் சின்னப்பன் அடிகள் கலந்து கருத்தமர்வை நெறிப்படுத்தினார்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 19ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.